




தூத்துக்குடி மாவட்ட கலைஞர் அரங்கில் நடைபெற்ற தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் தூத்துக்குடி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் ஆகியோர் கலந்து கொண்டு 2026 சட்டமன்ற தேர்தலுக்கான அறிவுரைகளை வழங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர செயலாளர் ஆனந்த சேகரன்,மாநில இளைஞரணி இன்பா ரகு,மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாநில பொறியாளர் அணி அன்பழகன், மாமன்ற உறுப்பினர் மண்டல தலைவர் பாலகுருசாமி மற்றும் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.

### அடையாறு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.1.98 கோடி மதிப்பில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து – ரூ.6.9 கோடி மதிப்பில் – புதிய திட்டப் பணியினை தொடங்கி வைத்தார்!

*சென்னை, ஜுலை 13 -*

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடையாறு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, ரூ.6.98 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணியினைத் தொடங்கி வைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, ரூ.6.98 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணியினைத் தொடங்கி வைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், அடையாறு மண்டலம், வார்டு170க்குட்பட்ட கலிகுன்றம் பிரதான சாலையில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ், ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட குழந்தைகள் மையக் கட்டடம் மற்றும் மூலதன நிதியின் கீழ் ரூ.3.54 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவர் ஆகியவற்றை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு172, கன்னிகாபுரம், வேளச்சேரி பிரதான சாலையில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.39.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, மடுவின் கரை, ஐந்து பர்லாங் சாலை சென்னை மேல்நிலைப்பள்ளியில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடுதல் பள்ளிக் கட்டடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

பின்னர், வார்டு175க்குட்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு காலனி 3வது அவென்யூ, வேளச்சேரி சாலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் சிங்கார சென்னை திட்டத்தின் கீழ் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளிக் கட்டடம் மற்றும் ஏ.எஸ்.கே. நகர் பிரதான சாலையில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.24.86 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடம் ஆகியவற்றைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, ஏ.எஸ்.கே.நகர் பிரதான சாலையில் ரூ.9.91 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்ட புதிய மற்றும் சிறிய உயர்கோபுர மின்கம்பங்களை பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

வார்டு 172க்குட்பட்ட நேரு நகரில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.37.66 இலட்சம் மதிப்பீட்டில் 44 கம்பங்களில் பொருத்தப்பட்ட 120 கண்காணிப்பு கேமராக்கள் பயன்பாட்டினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி ஆர்.பிரியா, வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச். அசன் மௌலானா, துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) பிரதிவிராஜ், மண்டலக்குழுத் தலைவர் இரா. துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி மு. மகேஸ்வரி முருகவேல், எஸ்.பாஸ்கரன் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மா.நாகராஜன் தலைமை ! ஜே.ஜே.எபினேசர் - இரா.லட்சுமணன் முன்னிலை !

# ஆர்.கே.நகர் கிழக்கு - 40(அ) வட்ட பாக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### ஆர்.டி.சேகர் ஆலோசனை வழங்குகிறார் ! கலாநிதி வீராசாமி - கே.வி.லோகேஷ் பங்கேற்பு!

சென்னை, ஜீலை 13

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40(அ) வட்ட திமுக சார்பில் (பி.எல்.ஏ.2) மற்றும் (பி.எல்.சி) ஆலோசனைக் கூட்டம் இன்று (13.07.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் தண்டையார் பேட்டை நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் அப்போலோ மருத்துவமனை அருகில் நடைபெறுகிறது.

வட்ட செயலாளர் மா. நாகராஜன் தலைமை வகிக்கிறார்.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், 40வது வார்டு மாமன்ற உறுப்பினர் குமாரி நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்டக் கழக நிர்வாகிகள்: இந்து ராஜேந்திரன், பி.மாலதி, மூ.ஆனந்தன், அ.பிரான்சிஸ்சேவியர், ஆர். பாஸ்கர், சி.ஜெ.மோகன், வி.ராஜசேகர், டி.மணி மாறன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, ஆலோசனை வழங்குகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, தொகுதி பார்வையாளர் கே.வி.லோகேஷ், என்.அனிபா, ஆர். டி.ராஜா, கே.பாலு, மு. வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், லைலாண்ட் மோகன், வானூர் ராஜி, ஜி.தினேஷ்குமார், பி.ஜானகி, சுகன்யா, ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

எனவே வட்டத்துக்கு உட்பட்ட இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் அணிகளின் மாவட்ட மற்றும் பகுதி நிர்வாகிகள் அனைத்து பாகம் முகவர்கள் பாக உறுப்பினர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் மா. நாகராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜி.பிரேம்குமார்,

வஉசி நகர் பத்மநாபன், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (12.7.2025) வேளச்சேரி சட்டமன்ற தொகுதி, திருவான்மியூர் பேருந்து நிலையத்தை சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்துவதற்கான பணியை தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஜே.எம்.எச்.அசன் மவுலானா எம்.எல்.ஏ. ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் .கோ.பிரகாஷ், மாநகர போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ். ருத்ரமூர்த்தி, பொறியாளர்கள் மகாவிஷ்ணு, ராஜமகேஷ்குமார், திருமதி.விஜயகுமாரி, அரசு அலுவலர்கள் மாமன்ற உறுப்பினர் விசாலாட்சி துரைகபிலன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (12.07.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு172, கன்னிகாபுரம், வேளச்சேரி பிரதான சாலையில் ரூ.39.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி ஆர்.பிரியா, அடையாறு மண்டலக்குழுத் தலைவர் இரா.துரைராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 143-வது நாள்!

## எழும்பூர் தெற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



*சென்னை, ஜுலை 13 -*

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுத கரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 143வது நாள் எழும்பூர் தெற்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு வழிகாட்டுதல்படி உணவு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 143 ஆம் நாளான கழகத்தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (12.7.2025) எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 108, வைத்தியநாதன் தெரு, விநாயகர் கோவில் அருகில், வட்ட செயலாளர் வான் மதி கதிரவன்

2) வட்டம் 108, எம். எஸ் நகர், (விநாயகர் கோவில் அருகில்), சேத்தப்பட்டு வட்ட செயலாளர் L.சுந்தர் ராஜன், எம்.சி. ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, புனித வதிஎத்திராசன், கே.எஸ். எம்.நாதன், கோ.மணி, ஜி. தாமோதரன், பி.எம். யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, எழும்பூர் தெற்கு/வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R. அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

கன்னியாகுமரி மேற்கு மற்றும் திருநெல்வேலி மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 19.07.2025 சனிக்கிழமை | மாலை 6.00 மணி | திருநெல்வேலி மத்திய | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு மற்றும் திருநெல்வேலி மத்திய ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | நாகர்கோவில் | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி, நாகர்கோவில். |
| | மாலை 4.00 மணி | பத்மநாபபுரம் | எம்.கே.ஆடிட்டோரியம், வேர்க்கிளம்பி. |
| 19.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | ராதாபுரம் | எம்.எஸ்.மஹால், வள்ளியூர். |
| 20.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | பாளையங்கோட்டை | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |
| | மாலை 4.00 மணி | திருநெல்வேலி | ஏ.ஆர்.திருமண மண்டபம், சங்கரன்கோவில் சாலை, கானார்பட்டி, மானூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 09.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி